<u>4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு V. ஜான் மினோ, பி.ஏ. பி. எல்,** 4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 833/2023**

**நாள்: 09.08.2024** **வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுபாஷ்சந்திரபோஷ் | தொழில் | : |
| த/பெ | : தாஸ் | கிராமம் | : |
| வயது | : 43 | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

<u>முதல் விசாரணை –</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன். 25.08.2023 ஆம் தேதிய வாதி பெயருக்கு பிரதிவாதி ரூ.16,00,000/–க்கு வழங்கிய "இந்தியன் வங்கி உடுமலைப்பேட்டை கிளை" காசோலை அசல் (காசோலை எண்.127854) வா.சா.ஆ.1, 28.08.2023 ம் தேதிய ரிட்டன் மெமோ நகல் வா.சா.ஆ.2, 21.09.2023 ஆம் தேதிய வாதி வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அனுப்பி வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.3, 23.09.2023 ஆம் தேதிய மேற்படி அறிவிப்பு திரும்பி வந்த அஞ்சல் கவர் வா.சா.ஆ.4, Postal Online Tracking copy வா.சாஆ.5, பிரதிவாதியின் கணவர் C. ராமகிருஷ்ணன் பெயரில் உள்ள கிரைய

ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6, வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.7 தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது,

V JOHN MINO

Digitally signed by V JOHN MINO
Date: 2024.08.09 17:10:37 +0530

4 வது கூடுதல் மாவட்ட நீதிபதி, (பொறுப்பு)
உடுமலைப்பேட்டை.